# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கல்விமாணித் தேர்வு 2012/2013

**EDS 3223 விசேட தேவைகள்சார் கல்வி (Special Needs Education)**

---

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. "கல்வி ஒரு மனித உரிமை என்ற வகையில் விசேட தேவையுடைய பிள்ளைகளும் அதற்கு உரித்துடையவர்களாவர்"
   - i. விசேட தேவைகள் சார் கல்வி என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)
   - ii. விசேட தேவைகள்சார் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் முறைசாராக் கல்வியின் பயன்பாட்டைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)
   - iii. ஆசிரியர்களுக்கு விசேட தேவைகள்சார் கல்வி தொடர்பான விளக்கம் ஏன் அவசியம் என்பதற்கான காரணங்களை விபரிக்குக. (06 புள்ளிகள்)

2. .
   - i. அறிகைசார் இயலாமை என்றால் என்ன? (04 புள்ளிகள்)
   - ii. வகுப்பறைகளில் அறிகைசார் இயலாமை உள்ளவர்களது வெளிப்பாடுகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   - iii. வகுப்பறைக் கற்றல்சார் செயற்பாடுகளில் பயனுறுதியான விளைவுகளை ஏற்படுத்த ஆசிரியர்கள் ஆற்றக் கூடிய பணிகள் ஆறினை (06) விளக்குக. (6x1=06 புள்ளிகள்)

3. .
   - i. விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு உதவும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (Community based Rehabilitation - CBR) என்றால் என்ன? (04 புள்ளிகள்)
   - ii. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   - iii. இயலாமை உடையோருக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு திட்டத்தின் கீழான வலுவூட்டற் செயற்பாட்டின் ஐந்து அணுகுமுறைகளைக் குறிப்பிட்டு உதாரணங்கள் காட்டி விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II

4. .
   i. விசேட பாடசாலை முறைமையினை விளக்கி அதன் வகைகள உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள்)
   ii. விசேட தேவையுடைய பிள்ளைகளின் வரலாற்று ரீதியாக இனங்காணப் பருவங்களைச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

5. .
   i. விசேட சூழ்நிலைகளில் வைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் என்பவ உதாரணங்கள் காட்டித் தெளிவுபடுத்துக.

   (12 புள்ளிகள்)

   ii. விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் குடு மற்றும் சமூகத்தின் பங்கினைப் பொருத்தமான உதாரணங்கள் மூல விபரிக்குக.

   (12 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பெழுதுக.
   i. ஓட்டிஸம்( தன்னாழ்வு)
   ii. விசேட தேவைகள்சார் கல்விக்கான கலைத்திட்டம்
   iii. பேச்சு மற்றும் மொழிசார் குறைபாடுகள்
   iv. மீத்திறன் உடைய மாணவர்கள்

   (4x6=24 புள்ளிக

7. 'அனைவருக்கும் கல்வி அனைத்தும் கல்விக்கே'
   i. உள்ளடங்கற் கல்வி என்பதை தெளிவுபடுத்தி , இதன் மூலம் அனைவருக் கல்வி என்ற இலக்கை எவ்வாறு அடைய முடியும் என்பதை ஐந்து உதாரணங்களுடன் விளக்குக.

   (5x1=05புள்ளிகள்)

   ii. உள்ளடங்கற் கல்வி பற்றிய சிந்தனைகள் ஆசிரியர்கள் ஏன் அறிந்து கொ வேண்டும் என்பதற்கு பொருத்தமான ஐந்து (5) காரணிகளை எடுத்துக்கூ

   (5x1=05 புள்ளிகள்)

   iii. உள்ளடங்கற் கல்வியின் நோக்கத்தை இலங்கை அடைவதில் எதிர் நோக் நடைமுறை சவால்கள் ஏழு இனை (7) குறிப்பிட்டு அதனை வெ கொள்வதற்கான வழிவகைகளை தெளிவுபடுத்துக .

   (7x2=14 புள்ளிகள்)